09-01-2015

மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை மற்றும் கப்பல் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்.இராதாகிருஷ்ணன் அவர்களின் பத்திரிகை செய்தி

கடந்த 2014-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்கத்தா அருகே உள்ள பெட்டு வாகட் என்னும் இடத்தில் மீன் பிடித்து கொண்டிருந்த குமரி மாவட்டம் தூத்தூர், சின்னத்துறை மற்றும் கேரளா, ஆந்திராவை சார்ந்த 26 மீனவர்களையும், 3 விசைப்படகுகளையும் வங்காள தேச கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இந்த மீனவர்களை விடுதலை செய்ய கேட்டு மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை மற்றும் கப்பல் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்.இராதாகிருஷ்ணன் அவர்கள் தொடர்ந்து மத்திய உள்துறை அமைச்சர் மாண்புமிகு ராஜ்நாத்சிங் மற்றும் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மாண்புமிகு சுஷ்மா சுவராஜ் அவர்களை நேரில் சந்தித்து உடனடியாக இந்திய மீனவர்கள் பங்காள தேசத்திலிருந்து விடுதலை செய்யக்கேட்டு வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில் மத்திய அரசின் முழு முயற்சியால் 30-12-2014 அன்று பங்காள தேச உள்துறை அமைச்சர் அனைத்து மீனவர்களையும் விடுதலை செய்ய ஆணையிட்டுள்ளார்கள். அதன் பொருட்டு பங்காள தேச சட்டப்படி இந்திய தூதரக அதிகாரிகள், இந்திய மீனவர்கள் 26 பேரை விடுதலை செய்யவேண்டி உள்ள வழக்கு இம்மாதம் 19-ம் தேதி பங்காள தேச நீதிமன்றத்தில் வரவுள்ளது. அன்றைய தினமே அவர்கள் விடுவிக்கப்பட்டு நாடு திரும்புவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பங்காளதேசத்தில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் எடுத்து வருவதாக டாக்காவில் இருந்து பங்காள தேசத்துக்கான இந்திய தூதரக துணை கமிஷனர் திரு சந்தீப் சக்ரபோர்த்தி அவர்கள் மத்திய சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைத்துறை மற்றும் கப்பல் துறை அமைச்சர் மாண்புமிகு பொன்.இராதாகிருஷ்ணன் அவர்களின் அலுவலக அதிகாரிக்கு இன்று (09-01-2015) காலை தெரிவித்துள்ளார்கள்.

மீனவ சமுதாய மக்கள் நலனை காக்கும் பொருட்டு பாரத பிரதமர் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள் முழு முயற்சி எடுத்து வருகிறார். மேற்படி அனைத்து மீனவர்களும், அவரது விசைப்படகுகளும் உடனடியாக விடுவிக்கப்பட்டு தாயகம் திரும்புவார்கள் என மத்திய அமைச்சர் மாண்புமிகு பொன்.இராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

9.1.15

P.A. to Union Minister of State
for Road Transport &
Highways, Shipping
Camp Office: Nagercoil
Kanyakumari Dist.